# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, RANIPET

Case No. **SC.No.103/2023**
Prosecution: **PW2**

Deposition of the witness of **LW2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கோபிநாத் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.அபினேஷ்வரன் | Occupation | தனியார் கம்பெனியில் வேலை |
| Village /Area | திமிரி | Age | 21 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 9145 6455 5036 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **12.02.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள திமிரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊரை சேர்ந்தவர்கள். அவர்களை எனக்கு நன்கு தெரியும். அ.சா.1 கார்த்திக் மற்றும் இந்த வழக்கில் இறந்து போன கலையரசன் ஆகிய இருவரும் என் ஊரை சேர்ந்த என் நண்பர்கள். வழக்கு சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நானும், கலையரசன், கார்த்திக், தனுஷ் ஆகியோர் விளாரி ஏரியில் மீன் பிடித்தோம். அப்போது சுப்பிரமணியன் (எ) குண்டு என்பவர் எங்களை தடுத்த போது தான் அவர் அந்த ஏரியை குத்தகைக்கு எடுத்திருந்த விவரம் எங்களுக்கு தெரிய வந்தது. நாங்கள் திருட்டுத்தனமாக மீன் பிடித்ததாக சுப்பிரமணியன் எங்கள் மீது புகார் கொடுத்ததால் நானும், என் நண்பர்கள் இருவரும் சென்னைக்கு சென்றுவிட்டோம். பின்னர் நாங்கள் முன் ஜாமீன் பெற்ற பிறகு ஊருக்கு வந்தோம். ஊருக்கு வந்த பிறகு ஒரு மாதம் கழித்து நானும், கார்த்திக், காகா வசந்த் ஆகியோர் எதிரிகள் தினகரன், அசோக் ஆகியோருடன் ஏரியில் மீன் பிடித்தது சம்மந்தமாக சண்டை போட்டோம். மீண்டும் நாங்கள் சென்னைக்கு சென்று அங்கே வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். பிரச்சனை முடிந்துவிட்டது என்று நினைத்து வழக்கு சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம்.

கடந்த 02.08.2022–ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், கலையரசன், கார்த்தி ஆகிய மூவரும் திமிரிக்கு முடி வெட்டிக்கொண்டு, புத்தாடை வாங்கலாம் என்று நினைத்து ஹோண்டா ஆக்டிவா மோட்டார் சைக்கிளில் சென்றோம். நாங்கள் மோட்டார் சைக்கிளில் செல்லும் வழியில் தினகரன் வீட்டின் எதிரில் நாங்கள் சென்ற போது தினகரன் எங்களை பார்த்து அசிங்கமாக திட்டினார். நாங்கள் நின்று ஏன் திட்டுகிறீர்கள் என்று கேட்டோம். கார்த்தி கொஞ்சம் கோவமாக பேசியதால், தினகரன் இரும்பு ராடால் கார்த்திக்கின் பின் தலையில் அடித்தார். மோட்டார் சைக்கிளில் நடுவில் அமர்ந்திருந்த கார்த்திக் தடுமாறி கீழே விழும் போது அதே மோட்டார் சைக்கிளில் அமர்ந்து இருந்த நானும், கலையரசனும் கீழே விழுந்துவிட்டோம். தினகரன் அடித்த போது அவரது மகன் அசோக் வீட்டிற்கு சென்று கத்தியை எடுத்து வந்து முதலில் என்னை அவர் வெட்ட வந்த போது நான் ஒதுங்கினேன். அப்போது அந்த கத்தியின் முனை என் இடது புருவத்திற்கு மேல் பட்டு காயம் ஏற்பட்டது. கலையரசன் அங்கிருந்து சர்ச் பக்கமாக ஓட முயன்ற போது அசோக் கலையரசனின் பின் கழுத்தில் இரண்டு முறை வெட்டினார். உடனே கலையரசன் கீழே விழுந்துவிட்டார். நானும், கார்த்திக்கும் அலறினோம். அப்போது கலையரசன் வீட்டிலிருந்து ஆட்கள் வந்துவிட்டார்கள். அதுவரைக்கும் செல்வராணி, தினேஷ், சரத் ஆகியோர் என்னை கட்டையாலும், கார்த்திக்கை இரும்பு ராடாலும் அடித்துக் கொண்டிருந்தார்கள். கார்த்திக் தடுத்ததால் அவரது கை உடைந்துவிட்டது. என்னை அடித்த போது நான் தடுத்ததால் என் வலது கை சுண்டுவிரல் காயம் ஏற்பட்டது. பின்னர் ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள். கலையரசன் மயங்கி கீழே விழுந்துவிட்டார். எதிரிகள் ஓடிவிட்டனர். கலையரசனை அவரது அண்ணனும், கார்த்திகை அவருடைய அண்ணனும் மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். என்னை அழைத்து செல்ல உடனடியாக யாரும் வரவில்லை. பின்னர் என் அப்பாவும், அம்மாவும் வந்து என்னை ஆற்காடு அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றனர். எனக்கு முதல் உதவி சிகிச்சை கொடுத்து மருத்துவமனைக்கு வெளியே காத்திருக்க சொன்னதால் நான் வெளியே காத்திருந்தேன். அப்போது கலையரசனை மருத்துவமனை உள்ளே இருந்து வெளியே கொண்டு வந்தார்கள். நான் விசாரித்த போது அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வெட்டுக்கத்தி, இரும்பு ராடு, முள்வேலி கொம்புகள் (2) ஆகியவற்றை தான் எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்தினார்கள். சம்பவம் குறித்து கார்த்திக் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சுப்பிரமணி என்பவர் தான் விளாரி ஏரியில் மீன்பிடி குத்தனை எடுத்திருந்தார். அந்த ஏரியில் இரவு நேரத்தில் நாங்கள் அடிக்கடி திருட்டுதனமாக மீன் பிடித்து வந்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் நானும், காகா வசந்த், தனுஷ்,

கார்த்திக், விஜய பாஸ்கர், சூரியா ஆகியோர் ஒன்றுகூடி அந்த ஏரியில் இருந்த மீன்களை திருட்டுத்தனமாக எடுத்து செல்வது வழக்கம் என்றாலும், அதை சுப்பிரமணியன் அடிக்கடி கண்டித்திருந்தார் என்றாலும், அதனால் நாங்கள் சுப்பிரமணியனை அடித்து காயம் ஏற்படுத்தினோம் என்றாலும் சரியல்ல. அது சம்மந்தமாக போலிசார் எங்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றால் சுப்பிரமணியனை அடித்ததற்காக வழக்கு பதிவு செய்யவில்லை. மீன்கள் பிடித்ததற்காக வழக்கு பதிவு செய்தார்கள். அசோக் மற்றும் சேகர் ஆகியோர் அவர்கள் வீட்டிலிருந்த போது நான் மோட்டார் சைக்கிளில் வந்து அங்கு நிறுத்தி அவர்களை பார்த்து அசிங்கமாக பேசி மீன் பிடித்த பிரச்சனையில் உங்களை அன்றைக்கே சரியாக வெட்டாமல் விட்டுவிட்டோம் என்றும், இப்ப வாங்கடா என்று மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த உருட்டு கட்டையை எடுத்து அவர்களை நான் அடிக்க வந்ததாகவும், அந்தக் கட்டையை சேகர் பிடுங்கி தூரமாக போட்டுள்ளார் என்றாலும், உடனே நான் அவர்களை பார்த்து எங்கள் ஆட்களை கூட்டி வந்து என்ன செய்கிறோம் பார் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்று அன்றைய தினமே காலை 10.45 மணிக்கு நானும், காகா வசந்த், சின்னக்குட்டி மகன் தனுஷ், என்னுடைய பங்காளி அண்ணன் விஜய பாஸ்கர், கார்த்தி, குமரேசன் மற்றும் சிலருடன் வந்து கையில் தடி மற்றும் கத்தியுடன் வந்து தினகருடன் தகராறு செய்து உன் அண்ணன் சுப்பிரமணியன் பெரிய ஆளா என்றும், கெட்ட வார்த்தையால் திட்டியும், தினகரனை கார்த்தி என்பவர் தடியால் முதுகில் அடித்து காயம்படுத்தியுள்ளார் என்றாலும், அப்போது சேகர் தடுத்த போது தனுஷ், காகா வசந்த் ஆகியோர் உன்னை ஒழித்தால் தான் எங்களுக்கு நிம்மதி என்று சொல்லி அவர்கள் இருவரும் கையில் வைத்திருந்த தடியாலும், இரும்பு ராடாலும் சேகரை அடித்துள்ளனர் என்றாலும், தனுஷ் என்பவர் சேகர் தலை மீது இடது பக்கம் அடித்துள்ளார் என்றாலும், அதை கையால் தடுத்த போது காகா வசந்த் என்பவர் முழங்கை மீது இரும்பு ராடால் அடித்து காயம்படுத்தியுள்ளார் என்றாலும், அவர்களது கூச்சல் கேட்டு செல்வராணி, அசோக் ஆகியோர் சண்டையை விளக்கிவிட வந்துள்ளனர் என்றாலும், அப்போது நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு வீட்டின் அருகில் நிறுத்தி வைத்திருந்த நான்கு இருசக்கர வாகனங்களை அடித்து நொறுக்கியுள்ளோம் என்றாலும், அந்த மாதிரி நொறுக்கும் போது அந்த இடத்தில் கோவிந்தசாமி மகன் சூரியா மற்றும் அவருடன் வந்த அடியாட்கள் அந்த வாகனங்களை மீண்டும் அடித்துள்ளார்கள் என்றாலும், வீட்டின் அருகில் வைத்திருந்த காய்கறிகளையும் சாலையில் வீசி சேதப்படுத்தியுள்ளனர் என்றாலும் சரியல்ல. அவ்வாறு வாகனங்களை அடித்து நொறுக்கிய போது அசோக் என்பவர் எங்களை தடுத்து தள்ளிவிட்ட போது கலையரசன் அந்த வாகனங்களுக்கு இடையில் சிக்கியதால் அவரது கழுத்தில் அடிபட்டுள்ளது என்றாலும், அசோக் என்பவர் கலையரசனை கத்தியால் வெட்டவில்லை என்றாலும் தவறு. அந்த தள்ளுமுள்ளு ஏற்பட்ட போது தான் எனக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்றாலும், என்னை எதிரிகள் தாக்கவில்லை என்றாலும்

சரியல்ல. எதிரிகள் வீட்டில் அமைதியாக இருந்த போது பழைய சம்பவத்தில் விரோதம் கொண்டு நானும், என் நண்பர்களும் ஆயுதங்களுடன் எதிரிகளின் வீட்டினிடம் வந்து அவர்களை தாக்கி அவர்களது பொருட்களையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் சம்பவ இடத்திலிருந்து முதலில் திமிரி அரசு மருத்துவமனைக்கு மதியம் சுமார் 1.20 மணிக்கு சென்றேன். அங்கு யாரும் இல்லாததால் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு மதியம் சுமார்.1.50 மணிக்கு சென்றேன். ஆற்காடு அரசு மருத்துவமனையில் இருந்த மருத்துவர் என்னை பரிசோதித்தார். அந்த மருத்துவரிடம் சம்பவம் நடந்த இடம், எப்படி காயம் ஏற்பட்டது, என்ன காயங்கள் ஏற்பட்டது என்ற விவரங்களை சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்ட வழக்கு சொத்துகளை கொண்டு எதிரிகள் யாரும் எங்களை தாக்கவோ, காயப்படுத்தவோ இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆயுதங்களை நாங்கள் தான் சம்பவத்தில் பயன்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. கலையரசனுக்கு கத்தியால் அசோக்கை வெட்டி மரணம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் வீட்டில் நிறுத்தி வைத்திருந்த 4 இருசக்கர வாகனங்களையும் நாங்கள் அடித்து நொறுக்கிய போது அசோக் கலையரசனை தடுத்த போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் கலையரசன் தடுமாறி அந்த வாகனங்களுக்குள் சிக்கிக்கொண்டதில் அவருக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மீதும், காகா வசந்த் மீதும் குண்டர் தடுப்பு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். நானும், என் நண்பர்களும் அடிக்கடி பொதுமக்களிடம் தகராறு செய்வதால் தான் எங்கள் மீது குண்டர் தடுப்பு சட்டம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 06.05.2019-ம் தேதி எதிரிகளின் வீட்டின் அருகில் பொதுமக்களிடம் நான் தகராறு செய்ததை தட்டிக்கேட்ட ஆற்காடு காவல் நிலைய பெண் காவலர் அன்பரசியை கீழே தள்ளிவிட்டு அவரது கைபேசியை பிடுங்கிக் கொண்டு அவரையும் தாக்கியதாக என் மீது வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரிகளுடன் இருந்த முன் விரோதத்தை மனதில் வைத்து கலையரசன் தற்செயலாக இறந்ததை பயன்படுத்தி கொடுக்கப்பட்ட பொய் புகார் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.